[19th September 1958

MR. SPEAKER : The Hon. Minister need not answer the question.

Saidapet drainage scheme

* 334 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the estimate cost of the underground drainage scheme for the Saidapet Area, Madras, submitted by the Corporation of Madras;

(*b*) the amount of loan applied for by the Corporation for this scheme; and

(*c*) the amount of loan sanctioned and paid by the Government to the Corporation?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 29·81 lakhs, Sir.

(*b*) Rs. 10 lakhs during 1958–59.

(*c*) A loan of Rs. 1 lakh was paid in 1957–58.

SRI K. VINAYAKAM : Sir, which is the last date before which the entire underground system should be completed in Saidapet area?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no question of last date, Sir. The estimate for Rs. 29·81 lakhs has now been revised on the report of the Commissioner to Rs. 31·92 lakhs and it is under consideration. After all this is done, the half grant and half loan scheme will be pushed through.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the work is at present held up in Saidapet area because the loans have not been granted in time by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot subscribe to that, Sir. The Chief Engineer recommended a loan to the Corporation and the matter is under consideration.

District Board hospitals

* 335 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள ஜில்லா போர்டுகளால் நடத்தப்படும் எந்தெந்த ஆஸ்பத்திரிகள் 1958–59-ம் வருஷத்திலேயே கவர்மெண்டாரால் எடுத்து நடத்தப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Local Fund Medical Institutions at the following centres will be taken over by Government in 1958–59 :—

Cheyyar, North Arcot district,

Virudhachalam, South Arcot district,

Sriperumbattur, Chingleput district.

19th September 1958]

Bhavani, Coimbatore district,
Tirupattur, Ramanathapuram district,
Arantangi, Tanjore district,
Srivaikuntam, Tirunelveli district,
Jayakondacholapuram, Tiruchirappalli district,
Harur } Salem district.
Hosur }
Tiruchendur, Tirunelveli district and

Lady Pentland Hospital for Women and Children and Local Fund Dispensary for Men at Kanadukathan in Ramanathapuram district.

SRI P. G. MANICKAM : ஜில்லா போர்டுகள் கலைக்கப்பட்ட பிறகு ஜில்லா போர்டாரால் நடத்தப்பட்டுவந்த ஆஸ்பத்திரிகளுடைய நிர்வாகம் எந்த முறையில் நடைபெறும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த முறையில் நடக்க வேண்டுமோ அந்த முறையில் நடந்துகொண்டிருக்கும்.

SRI M. SELVARAJ : விருத்தாசலத்திலுள்ள ஆஸ்பத்திரியை அரசாங்கம் எடுத்துக் கொண்டு கிட்டத்தட்ட எழெட்டு மாதங்கள் ஆகின்றன. இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டு மாத காலமாக அந்த ஆஸ்பத்திரியில் மருந்து இல்லாத காரணத்தால் அங்கிருக்கும் டாக்டர் எந்தவிதமான வேலையும் செய்யாமல் இருக்கிறார் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? ஆகவே, அதை உடனடியாக எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : தனிப்பட்ட ஆஸ்பத்திரி எதிலாவது அம்மாதிரி கஷ்டம் இருந்தால், அதை கனம் அங்கத்தினர் தெரிவித்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

SRI M. KANDASAMI PADAYACHI : ஜில்லா போர்டு நடத்தி வந்த ஆஸ்பத்திரிகளில் அரசாங்கத்தார் இப்பொழுது டாக்டர்களைப் போட்டு நடத்தி வந்தாலும், அங்கே மருந்து சப்ளை சரியாக இல்லாததால், அவைகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, நடத்துவதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜில்லா போர்டு பரிபாலனத்தில் இருந்த எந்த எந்த ஆஸ்பத்திரிகளை அரசாங்கம் எடுத்துக் நடத்துவார்கள் என்பதற்கு பதில் சொன்னேன். அரசாங்க ஆஸ்பத்திரிகளை எந்தவிதமாக நடத்துகிறார்களோ, அதேபோல இந்த ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளையும் சர்க்கார் நடத்தும்.

SRI A. A. RASHEED : Sir, is it not the policy of the Government to take over all the District Board hospitals and leave the dispensaries to the Panchayat Unions?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Panchayat Union is in the offing. We shall consider this later when it actually comes into existence.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்து நடத்தும்போது, அவைகளில் ஜில்லா போர்டார் செய்திருந்த வசதிகளைவிட அதிக வசதிகள் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால், ஏற்படுத்துவதற்காவது முன்வருவார்களா ?

[19th September 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி எடுத்துக்கொள்ளப்படுகிற ஆஸ்பத்திரிகளிலே அதிக வசதிதான் ஏற்படும். இப்பொழுது தாலூகா தலைநகரத்தில் இருக்கும் ஆஸ்பத்திரிகளைத்தான் முதலில் எடுத்துக் கொள்கிறோம்.

Political prisoners

* 336 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of political prisoners (district-war) imprisoned in this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of Political prisoners in this State is as follows : —

Coimbatore	3
Madurai	11
Ramanathapuram	3
Salem	19
Tanjore	36
Tiruchirappalli	539
Tirunelveli	9

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே, எட்டு, ஒன்பது வருஷங்களுக்குமேல் ஜெயிலில் இருந்து வருகிறார்களே அவர்களை விடுதலை செய்யாவிட்டாலும், தண்டனைக் காலத்தைக் குறைக்கவாவது அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " விடுதலை செய்யாவிட்டாலும் தண்டனைக் காலத்தையாவது குறைக்கக்கூடாதா " என்று கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதிலிருந்து அவர் என்ன வேண்டுகிறார் என்று தெரியவில்லை. இவர்கள் விஷயம் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு, முடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, அரசியல் கைதிகள் என்ற முறையில், அவர்களுக்கு விசேஷ வசதிகள் ஏதேனும் வழங்கப்படுகின்றனவா ? அவ்வாறு இல்லையென்றால், விசேஷ வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவரவர்களுடைய முன் வாழ்க்கை முறைப்படி வகுப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தனியாக அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சில வசதிகளும் இருக்கின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : ஆந்திர ராஜ்யத்திலே, ஜன்மதண்டனை அடைந்த கைதிகள் உட்பட, எல்லா அரசியல் கைதிகளும் விடுதலை செய்திருக்கிறார்கள். ஆனால், நமது ராஜ்யத்திலே அது போன்ற விடுதலை செய்யாமலிருப்பதற்குக் காரணம் அரசியல் குரோதமா ? அல்லது ஏதேனும் காரணங்கள் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் மற்ற அரசாங்கங்களைப் பார்த்து பாடம் கற்றுக்கொள்வது இல்லை.

SRI N. K. PALANISAMI : கனம் மந்திரி அவர்கள், " அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வருவதாக " சொல்கிறார்கள். அப்போதைக் கப்போது கவனிக்கப்பட்டு யாராவது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களா ?